## செப்டம்பர் – 16 – ஞாயிறு

**"என் பொருட்டும் நற்செய்தியின் பொருட்டும் தம் உயிரை இழக்கும் எவரும் அதைக் காத்துக் கொள்வார்" (மாற் 8:35)**

### முதல் வாசகம் : ஏசாயா 50 : 5 - 9

ஆண்டவராகிய என் தலைவர் என் செவியைத் திறந்துள்ளார் நான் கிளர்ந்தெழவில்லை விலகிச் செல்லவுமில்லை. அடிப்போர்க்கு என் முதுகையும், தாடியைப் பிடுங்குவோர்க்கு என் தாடையையும் ஒப்புவித்தேன். நிந்தனை செய்வோர்க்கும் காறி உமிழ்வோர்க்கும் என் முகத்தை மறைக்கவில்லை. ஆண்டவராகிய என் தலைவர் துணை நிற்கின்றார் நான் அவமானம் அடையேன் என் முகத்தைக் கற்பாறை ஆக்கிக் கொண்டேன் இழிநிலையை நான் அடைவதில்லை என்றறிவேன். நான் குற்றமற்றவன் என எனக்குத் தீர்ப்பு வழங்குபவர் அருகில் உள்ளார் என்னோடு வழக்காடுபவன் எவன்? நாம் இருவரும் எதிர் எதிரே நிற்போம் என்மீது குற்றஞ்சாட்டுபவன் எவன்? அவன் என்னை நெருங்கட்டும். இதோ, ஆண்டவராகிய என் தலைவர் எனக்குத் துணைநிற்கின்றார் நான் குற்றவாளி எனத் தீர்ப்பிட யாரால் இயலும்? அவர்கள் அனைவரும் துணியைப் போல் இற்றுப்போவார்கள் புழுக்கள் அவர்களை அரித்துவிடும்.

**பதில்பாடல் :** உயிர் வாழ்வோர் நாட்டில் நான் ஆண்டவர்
திருமுன் வாழ்ந்திடுவேன்.

### இரண்டாம் வாசகம் : யாக்கோபு 2 : 14 – 18

என் சகோதர சகோதரிகளே, தம்மிடம் நம்பிக்கை உண்டு எனச்சொல்லும் ஒருவர் அதைச் செயல்களிலே காட்டாவிட்டால், அதனால் பயன் என்ன? அந்த நம்பிக்கை அவரை மீட்க முடியுமா? ஒருசகோதரன் அல்லது ஒருசகோதரி போதிய உடையும் அன்றாட உணவும் இல்லாதிருக்கும்போது, அவர்கள் உடலுக்குத் தேவையானவை எவற்றையும் கொடாமல் உங்களுள் ஒருவர் அவர்களைப் பார்த்து, "நலமே சென்றுவாருங்கள் குளிர்காய்ந்து கொள்ளுங்கள் பசியாற்றிக்கொள்ளுங்கள்" என்பாரென்றால் அதனால் பயன் என்ன? அதைப்போலவே, நம்பிக்கையும் செயல் வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும். ஆனால், "ஒருவரிடம் நம்பிக்கை இருப்பதுபோல இன்னொருவரிடம் செயல்கள் இருக்கின்றன" என யாராவது சொல்லலாம். அதற்கு என்பதில் செயல்கள் இன்றி எவ்வாறு நம்பிக்கை கொண்டிருக்க முடியும் எனக்காட்டுங்கள். நானோ என்செயல்களின் அடிப்படையில் நான் கொண்டுள்ள நம்பிக்கையை உங்களுக்குக் காட்டுகிறேன்.

### நற்செய்தி : மாற்கு 8 : 27 - 35

அக்காலத்தில் இயேசு தம்சீடருடன் பிலிப்புச் செசரியாவைச் சார்ந்த ஊர்களுக்குப் புறப்பட்டுச்சென்றார். வழியில் அவர் தம் சீடரைநோக்கி, "நான் யார் என மக்கள் சொல்கிறார்கள்?" என்று கேட்டார். அதற்கு அவர்கள் அவரிடம், "சிலர் திருமுழுக்கு யோவான் எனவும் வேறுசிலர் எலியா எனவும் மற்றும் சிலர் இறைவாக்கினருள் ஒருவர் எனவும் சொல்கின்றனர்" என்றார்கள். "ஆனால் நீங்கள் நான் யார் எனச்சொல்கிறீர்கள்?" என்று அவர் அவர்களைக்கேட்க, பேதுரு மறுமொழியாக, "நீர் மெசியா" என்று உரைத்தார். தம்மைப்பற்றி எவரிடமும் சொல்லவேண்டாம் என்று அவர்களிடம் அவர் கண்டிப்பாய்க் கூறினார். "மானிடமகன் பலவாறு துன்பப்படவும் மூப்பர்கள், தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர்கள் ஆகியோரால் உதறித்தள்ளப்பட்டுக் கொலை செய்யப்படவும் மூன்று நாள்களுக்குப்பின் உயிர்த்தெழவும் வேண்டும்" என்று இயேசு அவர்களுக்குக் கற்பிக்கத் தொடங்கினார். இதையெல்லாம் அவர் வெளிப்படையாகவே சொன்னார். பேதுரு அவரைத் தனியே அழைத்துக் கடிந்து கொண்டார். ஆனால் இயேசு தம்சீடர்கள் பக்கம் திரும்பிப் பார்த்து பேதுருவிடம், "என் கண்முன் நில்லாதே, சாத்தானே. ஏனெனில் நீ கடவுளுக்கு ஏற்றவைபற்றி எண்ணாமல் மனிதருக்கு ஏற்றவை பற்றியே எண்ணுகிறாய்" என்று கடிந்துகொண்டார். பின்பு அவர் மக்கள்கூட்டத்தையும் சீடரையும் தம்மிடம் வரவழைத்து, "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம்சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப்பின்பற்றட்டும். ஏனெனில் தம் உயிரைக் காத்துக்கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்துவிடுவார் என் பொருட்டும் நற்செய்தியின் பொருட்டும் தம் உயிரை இழக்கும் எவரும் அதைக் காத்துக்கொள்வார்" என்றார்.

**தியானம்:** நமது விசுவாச வாழ்வு வெளிப்படையானதாக இருக்கவேண்டும். மறைக்கப் பட்டதாகவோ . தழும்பல் நிலையிலோ இருக்கக் கூடாது. இன்றும் எத்தனையோ மக்கள் கிறிஸ்த்தவர்கள் என்ற காரணத்தால் துன்புறுத்தப் படுகின்றார்கள். ஆலயங்களில் கூட மக்கள் கொல்லப் படுகின்றார்கள். நாம் வாழும் இந்நாடு நமக்கு மதசுதந்திரத்தை தந்துள்ளபடியால் நம்மால் நிம்மதியாக வாழமுடிகின்றது. பல நாடுகளில் அப்படி அல்ல. இன்றைய வாசகங்கள் நாம் எவ்வாறு வாழவேண்டும் என்று எமக்கு கற்றுத்தருகின்றன. கடவுள் நம்முடன் இருக்கையில் நாம் எதற்கும் அஞ்சத் தேவை இல்லை. நீர் கடவுளின் மெசியா என்று அறிக்கை செய்த இராயப்பரைப் பார்த்தே யேசு சாத்தானே அப்பாலே போ என்கின்றார். யேசுவின் மேல் கொண்ட அன்பு இராயப்பரை அவ்வாறு சொல்ல வைத்தாலும், கடவுளின் சித்தம் என்ன என்பதனை முழுமையாக அவர் அறிந்திருக்கவில்லை. அதனால் தான் யேசு தமது பாடுகள் பற்றி கூறும்போது அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நமக்கு மிக நெருக்கமானவர்கள் துன்பப் படுகின்ற போது, அழுகின்ற போது நாமும் அவர்களுடன் சேர்ந்து அழுவதில்லையா? இது மனிதரிடம் உள்ள இரக்ககுணத்தின் வெளிப்பாடு. நாம் கடவுளின் சித்தப்படி வாழ வேண்டும் என்பதனை யேசு சொல்லிலும் செயலிலும் வாழ்ந்து காட்டினார். நம்மால் அவ்வாறு வாழமுடிகின்றதா? எல்லோருக்கும் சந்தோஸமாக வாழவே விருப்பம். அதனால் நாம் கடவுளை இலகுவில் மறந்து விடுகின்றோம். துன்பம் வரும்போது, நோய்கள் வரும்போது எம்மால் அதனை ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. யாருக்கும் இது பிடிப்பதும் இல்லை. அவ்வாறான வேளையில்தான் நாம் கடவுளைத் தேடுகின்றோம். கடவுள் தாம் இருப்பதை எமக்கு நினைவுபடுத்த, அல்லது அவரை தேடிவர இவற்றை நமக்கு அனுமதிக்கின்றாரோ என்று எண்ணத் தோன்றுகின்றது. கடவுள் எம்மருகில் இருக்கும்போது நாம் எதற்கும் அஞ்சத்தேவை இல்லை. எனவே துன்பப்படுபவர்களுக்கு ஆறுதலாக, தேவையில் உள்ளவர்களுக்கு உதவ எமது இரக்ககரத்தை நீட்டுவோம். கடவுள் நம்மைஆசீர் வதிப்பார்.